அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்** :115/2017
**தேதி** : 17/10/2017

## தீபாவளி வாழ்த்துக்கள்

கடந்த இரண்டு ஆண்டுகளாக, தீபாவளிப் பண்டிகையையொட்டி பெருமழை வெள்ளம், வர்தா புயல் என்ற ஆபத்துக்களைத் தொடர்ந்து, இந்த ஆண்டு டெங்கு காய்ச்சல் என்ற அச்சுறுத்தல் தமிழகத்தை வாட்டிக்கொண்டிருக்கிறது.

அதர்மத்தை அழிப்பதே இறைவனின் அவதார நோக்கம் என்று அறியப்பட்டது போல, நமது படைப்பின் நோக்கம், நமக்கு எதிரான சவால்களை எதிர்கொண்டு, மகிழ்வான நிறைவான பெருவாழ்வு வாழவேண்டும் என்பதே. இதற்கேற்ற வகையில், நமது எண்ணமும் செயலும் அமைந்திட வேண்டும்.

“ஆபத்தில்லா தீபாவளி - ஆரோக்கியமான பெருவாழ்வு” என்ற எண்ணத்தோடு நாம் தீப ஒளித் திருநாளைக் கொண்டாடுவோம். தீப ஒளி, புற இருளை விரட்டுவதோடு அக இருளையும் விரட்டி அழகு சேர்க்கட்டும்.

மகிழ்ச்சியான நமது கொண்டாட்டம், லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு, உழைப்பாளிகளுக்கு, வணிகர்களுக்கு வாழ்வில் ஒளி கூட்டுவதாக அமைகிறது என்பதே தீபாவளித் திருநாளின் தனிச்சிறப்பு!

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, குதூகலமாகக் கொண்டாடும் தீப ஒளித் திருநாளில், என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும், அன்பான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com